Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, JUNE 12, 2023

திங்கட்கிழமை,12 ஜூன் 2023 | ஒளி: 09 கதிர்: 016 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## தூரதிஷ்டமாகிறது அதிர்ஷ்டம்

அதிர்ஷ்ட இலாப சீட்டுகளின் விலைகளை இரண்டு மடங்குகளால் அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



தொடர்ச்சி P2

## 275 கடவுச்சீட்டுகளை வைத்திருந்தவர் கைது

ஷேன் செனவிரத்ன





தென்கொரியாவில் வேலை வாய்ப்பு பெற்றுத்தருவதாகக் கூறி, நாட்டின் பல பாகங்களிலும் உள்ள நபர்களிடமிருந்து 275 கடவுச்சீட்டுகளைச் சேகரித்து தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி, கெட்டம்பே தங்கொல்ல வீதியில் உள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு காரியாலயத்தை சுற்றிவளைத்த போதே, இந்த கடவுச்சீட்டுகள் மீட்கப்பட்டுள்ளன. இந்த சுற்றிவளைப்பு தேடுதலை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசாரணைப் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்டிருந்தனர்.

தொடர்ச்சி P2

எங்களை ஏமாற்றவே

# போலி வேசத்துக்குள் புதிய நாடகம்



### அரங்கேற்றப்படுகின்றது என்கிறார் நோகராதலிங்கம்

கிதாஞ்சன்

திடீரென வந்த ஜனாதிபதி ரணில் இப்பொழுது எங்களை அழைத்து பேச்சு என்று ஒரு போலி வேசத்துக்குள் புதிய நாடகம் அரங்கேறிக் கொண்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது என்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.நோகராதலிங்கம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுதந்திரபுரம் படுகொலை நிகழ்வு சனிக்கிழமை (10) அனுஷ்டிக்கப்பட்டபோது,

தொடர்ச்சி P2

கோழி இறைச்சி விலை குறித்து

## அரசாங்கம் கடும் முடிவு எடுக்கும்

### யூரியா விலையையும் குறைக்க தீர்மானம்



நாட்டில் கோழி முட்டைத் தட்டுப்பாடும் கோழி இறைச்சி விலையேற்றமும் தொடர்வதையடுத்து அது குறித்து அரசாங்கம் கடுமையான முடிவுகளை எடுக்கும் என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சஜித் அணியின் பெண் உறுப்பினருக்கு சிக்கல்

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தலைமையிலான கட்சியைச் சேர்ந்த பெண் உறுப்பினர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கவர்ச்சிகரமான வட்டியை வழங்குவதாகக் கூறி, ஒருகோடியே 17 இலட்சம் ரூபாயை மோசடி செய்தார் என்றக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட கெஸ்பேவ நகர சபையின் முன்னாளர் உறுப்பினரே, இம்மாதம் 23ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## ஜூலை 1 முதல் 3 சதவீதம் மட்டுமே கட்டண குறைப்பு




மின்சாரக் கட்டணத்தை குறைப்பது தொடர்பில் இலங்கை மின்சார சபை முன்வைத்துள்ள சில யோசனைகளின் அடிப்படையில் ஒட்டுமொத்த கட்டணக் குறைப்பு 3 சதவீதம் மட்டுமே என்று

தொடர்ச்சி P2



எக்ஸ்பிரஸ் பேர்ள் விவகாரம்

## முதன்முறையாக கூடுகிறது குழு



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் இலங்கைக் கடற்பரப்புக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீடு கோருவதற்காக சிங்கப்பூரில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கைத் தீர்ப்பதற்கு நியமிக்கப்பட்டுள்ள விசேட குழு ஜூன் 19ஆம் திகதி முதல் முறையாக கூடவுள்ளது என்று சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது என்றும் குழுவின் எதிர்கால நடவடிக்கை குறித்து கூட்டத்தில் கவனம் செலுத்தப்படும் என்றும் திணைக்களம் குறிப்பிட்டது.

தொடர்ச்சி P2

வெளிநாடுகளில் உயிரிழந்தோருக்கு


## இழப்பீடு வழங்குவதில் அமைச்சு மந்தகதி

### தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவிப்பு

வெளிநாட்டில் தொழிலில் ஈடுபட்டிருந்த போது உயிரிழந்த மற்றும் விபத்துக்குள்ளான இலங்கையர்களுக்கு இழப்பீடு மற்றும் நீதியைப் பெற்றுக்கொடுப்பதில் வெளிவிவகார அமைச்சு கவனக்குறைவாகவும் மந்தகதியிலும் செயற்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

தொடர்ச்சி P2

## நவீனுக்கு சபரகமுவ ஆளுநர் பதவி



சபரகமுவ மாகாணத்தின் புதிய ஆளுநராக முன்னாள் அமைச்சர் நவீன் திசாநாயக்க, நாளை செவ்வாய்கிழமை (13) பதவியேற்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தோருக்கு மாகாண ஆளுநர் பதவிகளை ஜனாதிபதி வழங்கவுள்ளார் என்று அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் நவீன் திஸாநாயக்க தெரிவித்திருந்தார்.

தொடர்ச்சி P2

## வேட்பு மனுக்களை இரத்துசெய்ய யோசனை



உள்ளூராட்சி மன்ற தேர்தலின் வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கான யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



பல்கலைக்கழக கட்டமைப்பில்

## தரமும் நற்பெயரும் மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டும்

ஆசியப் பல்கலைக்கழகங்களின் பட்டியலில் முதன்மையான இடத்தில் அன்று, இலங்கைப் பல்கலைக்கழகங்கள் இருந்ததாகவும், அந்தத் தரம் மற்றும் நற்பெயரை இந்நாட்டின் பல்கலைக்கழக கட்டமைப்பில் மீண்டும் ஏற்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சிறுவன் சடலமாக மீட்பு: தாத்தாவுக்கு சரீரப்பிணை



முல்லேரியாவிலுள்ள கட்டுமான தளத்தில் இருந்து வெட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட 05 வயது சிறுவனின் தாத்தாவை 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப்பிணைகளில் விடுவிக்குமாறு உத்தரவிட்ட கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம், ஜூன் 15ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டது.

தொடர்ச்சி P2

## கைக்குண்டு வீச முயன்றவர் மீது துப்பாக்கி பிரயோகம்

காலி அக்மீமன பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் மீது கைக்குண்டை வீச முயன்ற நபர் ஒருவர் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் குறித்தநபர் காயமடைந்துள்ளார்.

தொடர்ச்சி P2

ஜூலை 30ஆம் திகதிக்கு முன்னர்

## இனப்பிரச்சினைக்கு இறுதி தீர்வு வழங்காவிடின் பேச்சு இல்லை

### ஜனாதிபதியிடம் கூட்டமைப்பு தெரிவிப்பு



ஜூலை 30ஆம் திகதிக்கு முன்னர் இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு வழங்கப்படாவிட்டால், அரசாங்கத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தையில் பங்கேற்கப் போவதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கூறியுள்ளது.

தொடர்ச்சி P2



## இந்தவாரம் லண்டன், பிரான்ஸ் பயணமாகிறார் ஜனாதிபதி

இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 17ஆம் திகதி பயணமாகவுள்ளார் என்று அறியமுடிகிறது.

இலங்கையின் கடன் நெருக்கடி தீர்வு மற்றும் கடன் ஸ்திரத்தன்மைக்கு ஆதரவளிப்பதாக பரிஸ் கிளப் முன்னர் அறிவித்திருந்த நிலையில், ஜனாதிபதியின் பிரான்ஸ் விஜயத்தின் போது பரிஸ் கிளப் உறுப்பினர்களையும் சந்திக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## 275 கடவுச்சீட்டுகளை வைத்திருந்தவர் கைது

இந்த காரியாலயத்துக்கு, ஏனைய நாடுகளுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக அனுப்பிவைப்பதற்கான அனுமதி உள்ளது. எனினும், தென்கொரியாவுக்கு அனுப்பிவைப்பதற்கான அனுமதி இல்லை என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அரசாங்கம் கடும் முடிவு எடுக்கும்

கடுமையான விதிமுறைகளை அமுல்படுத்துவதன் மூலம் கோழி இறைச்சியின் விலை சடுதியாக உயர்வதைத் தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அடுத்த வார அமைச்சரவைக் கூட்டத்தில் குறித்த முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, அடுத்த பெரும்போகத்திலிருந்து ஒரு மூடை யூரியா உரத்தை 5 ஆயிரம் ரூபாய்க்கும் குறைவான விலையில் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்

திஸ்ஸமஹாராம பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

## சஜித் அணியின் பெண் உறுப்பினருக்கு சிக்கல்

இதற்கான உத்தரவை, கெஸ்பேவ பதில் நீதவான் சுனேத்ரா பெரேரா பிறப்பித்துள்ளார். பிலியந்தலையை வசிப்பிடமாகக் கொண்ட ஸ்ரீயாணிலதா பெரேரா என்பவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் பல்வேறான செயற்பாடுகளுக்கு நிதியை பயன்படுத்துவதாகவும் பல்வேறு உறுப்பினர்களின் பெயரை பயன்படுத்தி 3 இலட்சம் ரூபாய் முதல் 25 இலட்சம் ரூபாய் வரையிலும் கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் இதுவரையிலும் மோசடி செய்துள்ளார் என்று முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அந்த பெண் உறுப்பினரின் மோசடிக்குள் சிக்கிக்கொண்ட 11 பேர், பொலிஸில் இதுவரையிலும் முறைப்பாடு செய்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அரசாங்கம் கடும் முடிவு எடுக்கும்

கடுமையான விதிமுறைகளை அமுல்படுத்துவதன் மூலம் கோழி இறைச்சியின் விலை சடுதியாக உயர்வதைத் தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அடுத்த வார அமைச்சரவைக் கூட்டத்தில் குறித்த முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, அடுத்த பெரும்போகத்திலிருந்து ஒரு மூடை யூரியா உரத்தை 5 ஆயிரம் ரூபாய்க்கும் குறைவான விலையில் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்

# போலி வேசத்துக்குள் புதிய நாடகம்

அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போது மேலும் தெரிவித்த அவர்,

“இவ்வாறான நினைவு நாட்களை அடுத்த சந்ததி மறந்துவிடக்கூடாது என்பதற்காக ஆண்டு தோறும் நினைவேந்தல் செய்யப்படுகின்றது.

மாறிமாறி வந்த கடந்தகால அரசாங்கங்கள் ஆரம்ப காலங்களில் ஜே.ஆர்.ஜெயவர்த்தன முதற்கொண்டு இறுதியாக ரணில் விக்கிரமசிங்க வரைக்கும் ஆட்சிசெய்தவர்கள் கடந்த ஆட்சிகாலங்களில் திட்டமிட்டு இனப்படுகொலையினை அரங்கேற்றி இருந்ததை நாங்கள் மறந்துவிடவில்லை.

அண்மையில் கடைசியாக சிங்கள பேரினவாதத்தின் கைக்கூலிகளால் படுகொலை முயற்சி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளது. இதனை வன்மையாக கண்டிப்பதுடன் இதுபோன்றுதான் தமிழ்மக்களுக்காக குரல் கொடுப்பவர்களை உரிமை போராட்டத்தில் பங்கெடுப்பவர்களை இந்த அரசாங்கம் பார்த்துக்கொண்டிருக்காது.

எங்கள் போராட்டத்தினை இல்லாமல் செய்யவேண்டும் என்பதற்காகவும் எங்கள் உரிமை போராட்டத்தினை நாங்கள் மீண்டும் ஒருதடவை சிந்திக்ககூடாது என்பதற்காகவே மாறி மாறி வரும் அரசாங்கங்கள் செயற்படுகின்றன.

நல்லாட்சி அரசாங்காம் என்று சொல்லப்பட்ட கடந்த அரசாங்கம் தமிழ் மக்களின் உரிமைகளை தராது எப்படி ஏமாற்றியதோ அதேபோல்தான் திடீரென வந்த ரணில் இப்பொழுது எங்களை அழைத்து பேச்சு என்று ஒரு போலி வேசத்துக்குள் புதிய நாடகம் அரங்கேறிக் கொண்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது.

இது தமிழ்மக்களை ஏமாற்றுவதற்கு ஜனாதிபதி முனைகின்றார். அவரால் கடந்த காலங்களில் நாங்கள் ஏமாற்றப்பட்டோம் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கா தன்னை தயார்படுத்துவதற்காக ஒருபோலி நாடகம் இந்த பேச்சுவார்த்தை என்று சொல்லிக்கொண்டு மீண்டும் தொடங்கியுள்ளது” என்றார்.

## முதன்முறையாக கூடுகிறது குழு

ஜூலை மாத தொடக்கத்தில் சிங்கப்பூர் சென்று கப்பல் நிறுவனம் மற்றும் காப்பீட்டு நிறுவனத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுபடவுள்ள குறித்த குழு, அதன் பின்னர் தீர்வு காண்பதற்கான கலந்துரையாடல்களை ஆரம்பிக்கவுள்ளது.

சிங்கப்பூரில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் ஆதரவையும் இதற்காக கோரவுள்ளதாக சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையின் அனுமதியைத் தொடர்ந்து நியமிக்கப்பட்ட குழுவில் சட்டமா அதிபர் தலைமையில் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு செயலாளர், கடல் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர், ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் மற்றும் ஆஸ்திரேலியாவின் சட்ட ஆலோசகர் ஆகியோர் அடங்குகின்றனர்.

## வேட்பு மனுக்களை இரத்துசெய்ய யோசனை

விடயதான அமைச்சரும் பிரதமருமான தினேஷ் குணவர்தனவின் தலைமையில் அண்மையில் நடைபெற்ற ஆலோசனைக் குழு கூட்டத்தின் போது இந்த யோசனை முன்வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆலோசனை குழுவில் பங்குபற்றிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இது தொடர்பான யோசனையை முன்வைத்திருந்ததாக இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம்புர தெரிவித்ததுடன், ஆலோசனைக் குழுவில் பங்கேற்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களும் தமது இணக்கப்பாட்டை அறிவித்தனர்.

தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், தேர்தல் தொடர்ந்தும் தாமதப்படுத்தப்படுவதால் உள்ளூராட்சி மன்றங்களின் எதிர்கால நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்து செய்வதற்கான யோசனையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், இவ்வாறான பிரேரணையை சமர்ப்பிப்பது தொடர்பில் தமது அமைச்சோ அல்லது அரசாங்கமோ இதுவரை இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என தெரிவித்த இராஜாங்க அமைச்சர், இது அமைச்சின் ஆலோசனைக் குழுவில் முன்வைக்கப்பட்ட யோசனை மாத்திரமே என்றார்.

## இந்தவாரம் லண்டன், பிரான்ஸ் பயணமாகிறார் ஜனாதிபதி

இந்த விஜயத்தின் போது இலங்கையின் எதிர்கால கடன் மறுசீரமைப்பு பணிகள் குறித்தும் ஜனாதிபதி கலந்துரையாடவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

லண்டன் மற்றும் பிரான்ஸுக்கு கிட்டத்தட்ட ஐந்து நாட்களுக்கு விஜயம் செய்யவுள்ள ஜனாதிபதி அங்கு விசேட பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளார்.

## நவீனுக்கு சப்ரகமுவ ஆளுநர் பதவி

இந்நிலையில், சபரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ பதவி விலகியதை அடுத்து வெற்றிடமாகியுள்ள பதவிக்கே அவர் நியமிக்கப்படவுள்ளார்.

வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத், வட மேல் மாகாண ஆளுநர் அட்மிரல் ஒப் த ப்ளீட் வசந்த கரன்னாகொட ஆகியோர் திங்கட்கிழமை (15) பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தனர்.

அந்த வெற்றிடங்களுக்கு வடக்கு மாகாண ஆளுநராக திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், கிழக்கு மாகாண ஆளுநராக செந்தில் தொண்டமான், வடமேல் மாகாண ஆளுநராக லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன ஆகியோர் கடந்த மே 17ஆம் திகதி பதவிப்பிரமாணம் செய்து கொண்டிருந்தனர்.

## கைக்குண்டு வீச முயன்றவர் மீது துப்பாக்கி பிரயோகம்

அக்மீமன பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சனிக்கிழமை (10) இரவு திடீர் சோதனைக்காக நிறுத்தப்பட்டுள்ளனர்.

அதன் போது ஒருவர் அங்கிருந்து தப்பிச் சென்றதாகவும், மற்றைய நபர் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டை அதிகாரிகள் மீது வீச முயன்றதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பின்னர், கைக்குண்டு வீச முயன்ற நபர் மீது ஒரு பொலிஸ் அதிகாரி ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் குறித்த நபர் காயமடைந்துள்ளதுடன், குறித்த நபரை அதிகாரிகள் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

மற்றைய நபர் ரி 56 துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் 105 தோட்டாக்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

## சிறுவன் சடலமாக மீட்பு: தாத்தாவுக்கு சரீரப்பிணை

அண்மையில் சடலமாக மீட்கப்பட்ட 05 வயது சிறுவனின் தாத்தா, குழந்தைக்குத் தேவையான பாதுகாப்பை வழங்கத் தவறியதன் காரணமாக பொலிஸாரர் சனிக்கிழமை (10) இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

உடைந்த கண்ணாடி போத்தலின் துண்டுகளால் ஏற்பட்டதாக கருதப்பட்ட வெட்டுக் காயங்களுக்கு உள்ளான குழந்தை, வியாழக்கிழமை மாலை (08) முல்லேரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுமானப் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டது.

குழந்தையின் மரணம் தொடர்பாக அன்றைய தினம் குழந்தையின் அருகில் இருந்த புல் வெட்டும் தொழிலாளி கைது செய்யப்பட்டு அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் புல் வெட்டும் இயந்திரத்தின் கத்திகள் சிறுவன் மீது தவறுதலாக மோதியதால் குழந்தை இறந்துவிட்டதாக ஒப்புக்கொண்டார்.

சந்தேக நபர் உடைந்த கண்ணாடி போத்தல் துண்டுகளை சிறுவனின் அருகே வைத்ததாக தெரிவித்ததுடன், புல் வெட்டும் தொழிலாளி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து ஜூன் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

## தரமும் நற்பெயரும் மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டும்

அதன் ஊடாக வெளிநாட்டு மாணவர்களையும் இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு ஈர்க்க முடியும் எனவும் அது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த 09ஆம் திகதி பிற்பகல் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டில் கல்வி முறையில் உள்ள பிரச்சினைகளை விரைவில் தீர்க்க வேண்டியதன் அவசியத்தை விளக்கிய ஜனாதிபதி, அனைவரும் சரியான வயதில் கல்வியை நிறைவுசெய்து முன்னேறிச் செல்லக்கூடிய சூழலை உருவாக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இலங்கையின் உபவேந்தர்கள் மற்றும் பணிப்பாளர்கள்

## தூரதிஷ்டமாகிறது அதிர்ஷ்டம்

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் லொத்தர் சீட்டு ஒன்றின் விலையை 40 ரூபாயாக அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக அகில இலங்கை லொத்தர் விநியோகஸ்தர்கள் சங்கத்தின் தலைவர் கிருஷாந்த கிரிஷாந்த மாரம்பகே தெரிவித்தார்.

அதன்படி, இருபது ரூபாய்க்கு விற்பனைச் செய்யப்படும் அதிர்ஷ்ட இலாபச் சீட்டின் விலை இரட்டிப்பாகும். அதனை, தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை உறுதிப்படுத்தியுள்ளன.

இந்த விலை அதிகரிப்புக்கு நிதி அமைச்சு ஒப்புதல் அளித்துள்ளதாக அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, லொத்தர் சீட்டுகளின் விலை அதிகரிக்கப்பட்டால், ஒரு லொத்தர் சீட்டுக்கான விற்பனை முகவர்களுக்கு தற்போது வழங்கப்படும் 3.75 ரூபாய் கொமிஷன் (தரகு பணம்) 8 ரூபாயாக அதிகரிக்கப்பட வேண்டுமென கிருசாந்த சுட்டிக்காட்டினார்.

கமிஷன் தொகையை எட்டு ரூபாயாக அதிகரிக்காவிட்டால் லொத்தர் சீட்டுகளை விற்க முடியாத நிலை ஏற்படும் என்றும் அவர் கூறுகிறார்.

லொத்தர் சீட்டுகளின் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமது தொழிற்சங்கம் போராட்டம் நடத்தி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விலையை அதிகரிப்பதில் லொத்தர் சீட்டுகளை வாங்குபவருக்கும் ஆட்சேபனை இருப்பதாக அவர்களுடனான உரையாடலில் இருந்து தெரியவருவதாக கிருஷாந்த மேலும் தெரிவித்தார்.

## ஜூலை 1 முதல் 3 சதவீதம் மட்டுமே கட்டண குறைப்பு

இலங்கை மின்சார சபையினால் ஜூலை 1ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள மின்சாரக் கட்டணக் குறைப்பின் 0 முதல் 30 அலகு வகைக்கான கட்டணம் 26.9 சதவீதத்தால் குறைக்கப்படும் என்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

31 முதல் 60 வரையான மின்சார அலகுகளை பயன்படுத்தும் நுகர்வோருக்கு 10.8 சதவீதமும், 61 முதல் 90 வரையான அலகுகளுக்கு 7.2 சதவீதமும் கட்டணம் குறைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அதிகளவான மக்கள் பயன்படுத்தும் 91 180 வரையான அலகுகளுக்கு 3.4 சதவீதம் கட்டணம் குறைக்கப்படும் என்பதுடன், 180 அலகுகளுக்கு அதிகமாக மின்சாரத்தை பயன்படுத்தும் நுகர்வோருக்கான கட்டணத்தை 1.3 சதவீதத்தால் குறைப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தொழில்துறை, பொது வகை, தெரு விளக்குகள் மற்றும் அரச நிறுவனங்கள் அகியவற்றின் கட்டணத்தில் மாற்றம் செய்யப்படமாது என்றும் ஹோட்டல் தொழில்துறையின் மின் கட்டணம் 12.6 சதவீதத்தால் குறைக்கப்படும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## இனப்பிரச்சினைக்கு இறுதி தீர்வு வழங்காவிடின் பேச்சு இல்லை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜனாதிபதி செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த விடயம் வலியுறுத்தப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திடம் முன்வைத்த கோரிக்கைகளுக்கான தீர்வுகளை முன்வைப்பதாக ஜனாதிபதி உறுதியளித்ததாகவும் சாணக்கியன் எம்.பி குறிப்பிட்டார்.

அந்த வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றத் தவறினால், உலகளாவிய சுயநிர்ணய உரிமையின் கீழ் இந்த நாட்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படும் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் சுமந்திரன் எம்.பி ஆகியோர் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியதாகவும் குறிப்பிட்டார்.

சுகவீனமுற்ற தமிழ் அரசியல் கைதி ஒருவர் பொசன் போயா தினத்தில் விடுதலை செய்யப்படுவார் என்று தமது கட்சி எதிர்பார்த்திருந்த போதிலும் அவர் விடுவிக்கப்படவில்லை எனவும் சாணக்கியன் எம்.பி சுட்டிக்காட்டினார்.

தற்போதைய ஜனாதிபதியுடன் கூட்டமைப்பு ஒரு வருடமாக பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் ஆனால் தமது கட்சியின் அடிப்படை கோரிக்கைகளுக்கு கூட அரசாங்கம் தீர்வை வழங்கவில்லை என்றார்.

## இழப்பீடு வழங்குவதில் அமைச்சு மந்தகதி

வெளிவிவகார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த அறிக்கை தொடர்பில் ஆராய்ந்தே தேசிய கணக்காய்வு அலுவலகம் இதனை தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் போது உயிரிழந்தவர்கள் மற்றும் ஊனமுற்றவர்களுக்கு இழப்பீடு வழங்குவதில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக கால தாமதம் ஏற்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சவூதி அரேபியாவில் 2012 ஆம் ஆண்டு விபத்துக்குள்ளாகி முற்றிலும் ஊனமுற்ற நபரொருவருக்கு இழப்பீடு கிடைப்பதில் 10 ஆண்டுகள் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அது தொடர்பான வழக்குப்பதிவும் அமைச்சின் அலட்சியப் போக்கினால் பல ஆண்டுகளாக காணாமல் போனதாகவும் கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு குவைத்தில் வீட்டுப் பணிப்பெண்ணாகப் பணிபுரிந்த போது உயிரிழந்த பெண்ணொருவரின் உடல் உறுப்புகள் அகற்றப்பட்டுள்ளதாக தெரியவந்தும் குறித்த மரணம் இடம்பெற்று 10 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரையில் சட்ட வைத்திய அறிக்கை பெறப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

ஐந்து கோடியே ஐம்பத்தாறு இலட்சத்து 19 ஆயிரத்து 842 ரூபாய் பயன்படுத்தப்படாத வீடுகளில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

# அத்துமீறி நுழைந்து யுவதி மீது தாக்குதல்

களுத்துறை பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த யுவதி ஒருவரைத் தாக்கி காயப்படுத்தி வீட்டின் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் மொரந்துடுவ பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் அவரது மனைவியும் கைது செய்யப்பட்டுள்ளனர் என களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வஸ்கடுவ பகுதியில் வசிக்கும் யுவதி ஒருவர் செய்த முறைப்பாட்டுக்கமைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களான சார்ஜன்டும் அவரது மனைவியும் குறித்த யுவதியின் வீட்டுக்குள் மே மாதம் 18 ஆம் திகதி இரவு அத்துமீறி நுழைந்து இந்த தாக்குதலை நடத்தியிருந்ததாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 3 சிறுமிகள் தப்பியோட்டம்

தடுத்துவைப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த சிறுமிகள் மூவர், அந்த முகாமில் இருந்து தப்பியோடிய சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. மடாட்டுகம நகருக்கு அண்மையில் உள்ள தடுப்பு முகாமில் இருந்தே, 15,16 மற்றும் 17 வயதான சிறுமிகள் தப்பியோடியுள்ளனர்.

அந்த மூவரும் கனேன்பிந்துவ, நொச்சியாகம மற்றும் தலாவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் ஆவார். இந்த மூன்று சிறுமிகளும் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் மேற்படி தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டவர்கள் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மீன்பிடிக்க சென்றவரை தாக்கிய காட்டு யானை

■ ஒலுமுதீன் கியாஸ்

கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட, கண்டல்காடு கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை (11) காலை காட்டு யானை தாக்கியதில், குடும்பஸ்தர் ஒருவர், பலத்த காயங்களுக்கு உள்ளாகி, கிண்ணியா தள வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கிண்ணியா மகாமாறு பகுதியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான ஆசுதீன் அன்சார் என்பவரே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளானவராவார்.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது, இவர் தனது வீட்டிலிருந்து, மோட்டார் சைக்கிளில் கண்டல்காடு பிரதேசத்தில் அமைந்துள்ள, மகாவலி கங்கை கொட்டியாரகுடாவில் மீன்பிடிக்க சென்ற போதே தாக்குதலுக்கு உள்ளானதாகவும், அவர் சென்ற மோட்டார் சைக்கிளும் சேதமடைந்து உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



# பங்காற்ற வேண்டும்

■ எம்.எஸ்.எம். ஹனீபா

நாட்டின் பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்புவதற்கு ஊடகவியலாளர்கள் பெரும் பங்காற்ற வேண்டுமென, அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.எம்.ஏ. கமல் நெத்மினி தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தினால் ஊடகவியலாளர்களுக்கு நடாத்தப்பட்ட நவீன இலத்திரனியல் ஊடகம் தொடர்பான பயிற்சி செயலமர்வு சனிக்கிழமை (10) அம்பாறை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

# தின்பண்டங்கள் சிறியவை விற்போருக்கு பெரிய மனசு

■ எச்.எம்.ஹேவா

சமையல் எரிவாயுவின் விலைகள் குறைக்கப்பட்டபோதிலும் அதன் நிவாரணத்தை நுகர்வோருக்கு பெருபாலான வர்த்தகர்கள் வழங்குவதே இல்லை. ஹட்டனைச் சேர்ந்த சில வர்த்தகர்களும் விலைகளை குறைப்பதே இல்லை.

இந்நிலையில், சிறிய தின்பண்டங்களை விற்பனைச் செய்யும் ஹட்டனைச் சேர்ந்த தள்ளுவண்டி வர்த்தகர்கள், தங்களுடைய தின்பண்டங்களின் விலைகளை 5 ரூபாவினால் குறைத்துள்ளனர்.

சமையல் எரிவாயு மற்றும் மூலப்பொருட்களின் விலைகள் குறைந்தாலும், அதனை நுகர்வோருக்கு வழங்காத ஹோட்டல் மற்றும் பேக்கரிகளை நடத்துவோருக்கு ஓர் எடுத்துக்காட்டாகவே, சிறிய தின்பண்டங்களின் விலைகளை குறைத்துள்ளதாக தள்ளுவண்டி வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

தங்களால் விற்பனைச் செய்யப்படும் அனைத்து வகையான சிறிய தின்பண்டங்களின் விலைகளும் 5 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளன என்றும் தள்ளுவண்டி வர்த்தகர்கள் தெரிவித்தனர்.





# கஞ்சாவுடன் சிக்கிய இராணுவ வீரர்

■ ராமு தனராஜா

தனமல்வில பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட அரம்போகம சுவந்த மாவத்த கம பகுதியில் புத்தல விசேட அதிரடிப் படையினரால் மேற்கொள்ள பட்ட சுற்றிவளைப்பின் போது நபர் ஒருவரிடம் இருந்து 8 கிலோ 5 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன் 24 வயதுடைய அம்பகமுவ தனமல்வில பகுதியை சேர்ந்த நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டு தனமல்வில பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் அம்பலாந்தோட்டை மயுராபுற இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவ வீரர் என்பதுடன் குறித்த சந்தேக நபரை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தனமல்வில பொலிஸார் தெரிவித்தனர்.

# மதுவுக்கு எதிராக களமிறங்கிய புத்திஜீவிகள்

■ நூருல் ஹூதா உமர்

சர்வதேச புகைத்தல் மற்றும் மது ஒழிப்பு தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேச செயலகம் மற்றும் பிரதேச செயலக சமுர்த்தி பிரிவின் ஏற்பாட்டில் கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் முழு அனுசரனையில் " புகைத்தலில் இருந்து மீண்ட ஒரு கிராமம் " மாபெரும் எதிர்ப்பு பேரணி சனிக்கிழமை (10) காலை 9 மணிக்கு சாய்ந்தமருது ஸாஹிறாக் கல்லூரி வீதி முன்றலில் இருந்து சாய்ந்தமருது பிரதான வீதி வழியாக மாளிகா சந்தியில் நிறைவடைந்தது.




# தேக்கு பலகைகளை கொண்டு சென்றவர் கைது

■ ராமு தனராஜா

கந்தகெடிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கந்தகெடிய பாலாகொல்ல பகுதியில் இருந்து பதுளை நோக்கி 401 தேக்கு பலகைகளை பதுளை நோக்கி கொண்டு செல்வதாக கந்தகெடிய பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய கந்தகெடிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் ஏக்கநாயகவின் ஆலோசனைக்கு அமைய உடன் வீதித்தடையை அமைத்து வாகனங்களை சோதனைக்கு உட்படுத்திய போது



லொறி ஒன்றில் தேக்கு பலகைகள் கொண்டு செல்வது கண்டுபிடிக்க பட்டுள்ளது.

இதன்போது பதுளபிட்டி பகுதியை சேர்ந்த இருவரும் பாலாகொல்ல பகுதியை சேர்ந்தவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக கந்தகெடிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

குறித்த தேக்கு பலகைகள் ஆறு லட்சம் ரூபாய்க்கும் அதிகமாக பெறுமதியுடையதாக இருக்கலாம் எனவும் சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் கந்தகெடிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# குடாகமவில் குத்துக்கரணம் அடித்த ஓட்டோ

■ ரஞ்சித் ராஜபக்ஷ

கடும் வேகத்தில் பயணித்த ஓட்டோவொன்று, வீதியில் இருந்து விலகி விபத்துக்குள்ளான சம்பவமொன்று ஹட்டன்-குடாகம பிரதேசத்தில் சனிக்கிழமை (10) இரவு இடம்பெற்றுள்ளது.

கொட்டகலையில் இடம்பெற்ற திருமண வைபவமொன்றில் பங்கேற்றவர்களை இறக்கிவிட்டு, அங்கிருந்த வட்டவளையை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த ஓட்டோவே இவ்வாறு குடாகமவில் குத்துக்கரணம் அடித்துள்ளது.



சம்பவத்தின் போது ஓட்டோ சாரதி மட்டுமே இருந்துள்ளார். அவருக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கமே இவ்வனர்த்தத்துக்கு காரணமென கண்டறியப்பட்டுள்ளது. ஓட்டோ கடுமையான சேதத்துக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவித்த ஹட்டன் போக்குவரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.



# மீனவருக்குத் தோணி

■ ஆர்.ஜெயஸ்ரீராம்

மட்டக்களப்பு வாகரையில் மீன் பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு தோணி இன்றி நீண்டகாலமாக தவித்த மீனவர் ஒருவருக்கு தோணி வழங்கப்பட்டது.

5 ஆம் வட்டாரம் வாகரையைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான க.இன்பராஜா என்பவருக்கே தோணி வழங்கப்பட்டுள்ளது.

தனது நிலைமையை அறிந்து வாசம் உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் விடுத்த வேண்டுகோளை அடுத்து கனடாவைச் சேர்ந்த பிறேம் மற்றும் சுவிஸ் நாட்டைச் சேர்ந்த லோகன் குடும்பத்தினர் இணைந்து இந்த மனித நேய உதவியை வழங்கியுள்ளனர்.

# உலருணவு பொதிகள் வழங்கிவைப்பு

■ செ.திவாகரன்

நுவரெலியாவில் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.

இலங்கை சேவா சர்வதேச அறக்கட்டளை மற்றும் ஸ்ரீ ஆறுமுக நாவலர் அறப்பணி ஊடாக சேவா அமெரிக்கா நிதியுதவியுடன் இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் ஏற்பாட்டில் பொருளாதார ரீதியில் சவாலை எதிர்நோக்கும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.







## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (2) ஆம் பிரிவின் கீழ் புரொட்டியஸ் அக்ரிகல்ச்சர் (பீவீடீ) எல்டீடி தனது பெயரை புரோடெஸ் ஹோல்டிங்ஸ் (பீவீடீ) எல்டீடி என பெயர் மாற்றம் செய்துள்ளது என்றும் அதற்கினங்க இக் கம்பனி 2022 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி முதல் புரோடெஸ் ஹோல்டிங்ஸ் (பீவீடீ) எல்டீடி என பெயர் மாற்றம் செய்யப்பட்டு கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. கம்பனியின் பதிவு செய்யப்பட்ட இலக்கம் PV00216406 மற்றும் கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி இல.7/46 பி, டீ சொய்சா மாவத்தை, டெம்பிளர்ஸ் கோர்ட், கல்கிஸ்சை.

**செயலாளர்கள்**
**கோர்ப்பரேட் எவயார்ஸ் (பிரைவேட்) லிமிடெட்**

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (2) ஆம் பிரிவின் கீழ் பாட்லீட் என்ட் ரோய் (பிரைவட்) லிமிட்டட் தனது பெயரை பீ எம் ஆர் மனீ புரோக்கர்ஸ் (பிரைவட்) லிமிட்டட் என பெயர் மாற்றம் செய்துள்ளது என்றும் அதற்கினங்க இக் கம்பனி 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி முதல் பீ எம் ஆர் மனீ புரோக்கர்ஸ் (பிரைவட்) லிமிட்டட் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. கம்பனியின் பதிவு செய்யப்பட்ட இலக்கம் PV9845 மற்றும் கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி "பார்ட்லீட் ஹவுஸ்" இல. 65 சி, பிரேப்ரூக் பிளேஸ், கொழும்பு 02.

**செயலாளர்கள்**
**கோர்ப்பரேட் எவயார்ஸ் (பிரைவேட்) லிமிடெட்**

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (2) ஆம் பிரிவின் கீழ் யுனிவர்சல் என்ஜினியரிங் லங்கா (பீவீடீ) எல்டீடி தனது பெயரை டிச்கே லங்கா (பீவீடீ) எல்டீடி என பெயர் மாற்றம் செய்துள்ளது என்றும் அதற்கினங்க இக் கம்பனி 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி முதல் டிச்கே லங்கா (பீவீடீ) எல்டீடி என பெயர் மாற்றம் செய்யப்பட்டு கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. கம்பனியின் பதிவு செய்யப்பட்ட இலக்கம் PV00214685 மற்றும் கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி 12 வது மாடி, என்டீபி-ஈடீபி கோபுரம், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு 02.

**பணிப்பாளர்**

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (2) ஆம் பிரிவின் கீழ் சுமதி யுனிவர்சல் மேனேஜ்மென்ட் என்ட் இன்வெஸ்ட்மென்ட் (பிரைவட்) லிமிட்டட் தனது பெயரை சுமதி யுனிவர்சல் (பிரைவட்) லிமிட்டட் என பெயர் மாற்றம் செய்துள்ளது என்றும் அதற்கினங்க இக் கம்பனி 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி முதல் சுமதி யுனிவர்சல் (பிரைவட்) லிமிட்டட் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. கம்பனியின் பதிவு செய்யப்பட்ட இலக்கம் PV119713 மற்றும் கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி இல. 77, செத்தாம் தெரு, கொழும்பு 01.

**செயலாளர்கள்**
**கோர்ப்பரேட் எவயார்ஸ் (பிரைவேட்) லிமிடெட்**

# நல்லொழுக்கங்களை கற்றுக்கொள்வது அவசியமாகும்

ஒவ்வொருவரின் வாழ்க்கைக்கு பின்னாலும் கட்டாயமாக ஓர் ஆசிரியரின் அளப்பரிய பங்கு இருக்கவே இருக்கும். கண்டிப்பு, ஒழுக்கம், கற்பித்தல், வழிநடத்தல் மற்றும் தலைமைத்துவ பண்புகளை வளர்த்துவிடல், திறமைகளை இனங்கண்டு சரியான பாதையில் பயணிப்பதற்கு வழிசமைத்துக் கொடுத்தல் ஆசான்களுக்கு இன்றியமையாதவையாகும்.

அவ்வாறான ஆசிரியர்களுக்கும் ஒரு சில பாடசாலைகளில் கல்விப் பொதுத் தராதரத்தில் கற்பிக்கும் மாணவர்கள் சிலருக்கும் இரண்டாம் பொருத்தமாகவே இருக்கும். இவ்வாறானதொரு வகுப்பு இனிமேலும் கிடைக்காதா? என ஏக்கப் பெருமூச்சு விடும் ஆசான்களும் இல்லாமல் இல்லை. அந்தளவுக்கு கற்பதில் கண்ணும் கருத்துமாய் மாணவர்கள் சிலர் இருப்பர்.

இந்தவருடத்துடன் எல்லாமே முடிந்துவிட்டது. பாடசாலை வாழ்க்கைக்கே முற்றுப்புள்ளி வைத்துவிடலாம் என்றெல்லாம் எண்ணும் மாணவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். அவ்வாறானவர்கள், வகுப்பில் மட்டுமன்றி, பாடசாலைகளிலும் குழப்படிகளில் ஈடுபடுவதில், கெட்டிக்காரர்களாக இருப்பர்.

நடந்து முடிந்த கல்விப் பொதுத் தராதர பரீட்சையில் இரண்டொரு சம்பவங்களைத் தவிர, மீண்டும் பரீட்சையை நடத்தும் வகையில் பாரிய முறைகேடுகள் எவையும் பதிவாகவில்லை. தனது தம்பிக்காக அண்ணன் பரீட்சையில் தோற்றியமை. வட்ஸ் அப்பின் ஊடாக விடைகளைப் பெற்றுக்கொண்டு பதிலளித்தமை இவ்விரண்டு சம்பவங்களாகும்.

இவ்விரு பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் நிறுத்திவைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர், பெறுபேறுகளை விடுவிப்பது தொடர்பில் பரீட்சைகள் திணைக்களம் தீர்மானிக்கும். எனினும், பல மாதங்கள் கடந்துதான் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். அதனால், வெகு சீக்கிரமாக பெறுபேறுகளை வெளியிட்டு, அடுத்தடுத்த கட்டங்களுக்கு நகர்த்திச் செல்வது முக்கியமானது.

ஆகையால், வினாத்தாள் மதிப்பீட்டை உரியமுறையில், சீக்கிரமாக முன்னெடுக்கவேண்டும். அத்துடன், மதிப்பிடுவோருக்கு வழங்கவேண்டிய கட்டணங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகளை உரியமுறையில் விடுவிப்பதற்கு அரசாங்கமும் கல்வியமைச்சும் துரிதமாக செயற்படவேண்டும்.

தங்களுடைய கோரிக்கைகளை விடைத்தாள்கள் மதிப்பீட்டு பணிகள் ஆரம்பிக்கும் முன்னரே முன்வைத்து, பேச்சுவார்த்தையின் ஊடாக தீர்வை பெற்றுக்கொள்ள, ஆசிரியர் சங்கங்கள் முன்வரவேண்டும். மதிப்பீட்டு பணிகளை இடைநடுவில் நிறுத்திவிட்டு பரீட்சார்த்திகளை கேடயங்களாக பயன்படுத்திவிடக்கூடாது.

பரீட்சைகள் நிறைவடைந்ததன் பின்னர், பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தாங்கள் கற்ற, தங்களுடைய சகோதரர்கள், தம் சமூகத்தை சார்ந்தவர்கள் கற்கவேண்டிய பாடசாலை என்றுகூட பார்க்காது. ஒருசில இடங்களில், நாற்காலிகள், மின் விசிறிகளில் தொங்கவிடப்பட்டிருந்தன. இன்னும் சிலவற்றின் கால்கள் முறிக்கப்பட்டு, உடைத்து நொறுக்கப்பட்டிருந்தன.

இன்னும் சில பாடசாலைகளில், பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே, அப்பாடசாலையை இறுதிநாள் சுத்தம் செய்த சம்பவங்கள் தொடர்பிலான புகைப்படங்களும் சமூக வலைத்தளங்களில் வைரலாகியிருந்தன. இனி பாவிக்க முடியாத அளவுக்கு அணிந்திருந்த சீருடைக்கு நிறங்கள் பூசப்பட்டிருந்தன.

மாணவர்களே!, கொள்ளாது. ஒழுக்கத்தை கடைப்பிடித்து சமூகத்துக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.




தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk

எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

காதலில் பதவி, பணம், அந்தஸ்து, சாதி போன்றவை முக்கியம் இல்லை என கதைகளில், திரைப்படங்களில், சின்னத்திரைகளில் வலியுறுத்திச் சொல்வார்கள். காதலில் தோல்வியடைந்த நாயகன், நாயகி நிலை கண்டு, இந்த இரசிகர் கூட்டமும் புலம்பியபடி பார்ப்பார்கள்.

ஆனால், இந்தப் பார்வை அல்லது எண்ணம், சமூகப் பெரும்பரப்பில் எதிர்மறையாகவே கருதப்படுகின்றது. சொல்வதைப் போல், எல்லோரும் நடப்பதில்லை.

உண்மையான காதலுடன் தங்களை அர்ப்பணிப்பவர்கள், சிறிய விகிதத்தில் மட்டும் இருக்கின்றனர். ஒருத்தியை அல்லது ஒருவனை விரும்புவதற்கு முன்னர், இவர்கள் அவர்களின் வரலாற்றை ஆராய்கின்றனர்.

தங்கள் சாதியா, மதமா, பதவி, சொத்துப் பத்துகள் குறித்து அலசித் தேடிய பின்னர் காதல் மலர்கின்றது. அதிலும் சிலர் பொழுதுபோக்குக்காக, தேவைக்காக, ரசித்து ஊர் சுற்றிய பின்னர் பிரிந்துவிடுகின்றனர்.

இதைப் பொழுதுபோக்கு எனச் சொன்னவர்கள், தங்கள் தவறுகளை மறைத்து, வேறு திருமணம் செய்து கொண்டு, தங்களைப் புதுமை விரும்பியாக சொல்லிக் கொள்வதும் உண்டு.

ஆனால், சிலரது வாழ்க்கையில் உண்மை அன்பு இருந்தாலும், அதை உறவுகள் சிதைத்து விடுவது பரிதாபம். மனங்களோடு விளையாடக்கூடாது.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கைது



என்.கே.அஷோக்பரன்

பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தார் என்ற குற்றச்சாட்டின் பெயரில் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடந்த ஏழாம் திகதி காலை கொள்ளுப்பிட்டியிலுள்ள அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டு, கிளிநொச்சி அழைத்துச் செல்லப்பட்டு, கிளிநொச்சி பொலிஸின் வாக்குமூலம் பெற்ற பின், கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டு, பிணையில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

பொலிஸார் சந்தேகத்தின் பெயரில் கைது செய்வதிலும், உடனே நீதவான் முன்பு ஆஜர் படுத்துவதிலும், குற்றஞ்சாட்டப்பட்டவர் பிணையில் விடுதலை செய்யப்படுவதும் சாதாரண நடைமுறைதானே! அப்படியிருக்கையில், கஜேந்திரகுமாரின் கைது இவ்வளவு பேசப்பட என்ன காரணம் என எவரேனும் வினவலாம். கஜேந்திரகுமாரின் கைதானது, கஜேந்திரகுமார் என்ற தனிநபரின் மீதானதும், அவர் முன்வைக்கும் தமிழ்த் தேசிய அரசியலின் மீதானதுமான அடக்குமுறையாகப் பார்க்கப்படுவதற்கான நியாயங்கள் சில இருக்கின்றன என்பதை நடந்த விடயங்களை அலசிப் பார்க்கும் போது ஓரளவு புரிகிறது.

கஜேந்திரகுமாரின் மீதான குற்றச்சாட்டு என்ன? பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை. அப்படி என்ன இடையூறு விளைவித்தார் என்ற கேள்வியிலே தேடலைத் தொடங்க வேண்டியதாகவுள்ளது.

யாழ்ப்பாணம் மருதங்கேணி பகுதியில் விளையாட்டுக் கழக உறுப்பினர்களை சந்திக்க கஜேந்திரகுமார் சென்று அங்கு விளையாட்டுக்கழக உறுப்பினர்களை பொது மைதானமொன்றில் சந்தித்த வேளை அங்கு சந்தேகத்திற்கு இடமான ஒருவர் நடமாடிக் கொண்டிருந்ததை அவதானித்த கஜேந்திர குமாரின் பகுப்பாய்வு அதிகாரி, குறித்த நபரிடம் அவரது ஆளடையாளம் பற்றி வினவிய போது, அவர் தன்னை ஒரு பொலிஸ் புலனாய்வு அதிகாரி என குறிப்பிட்டிருந்தார்.

அவ்வேளை கஜேந்திரகுமாரின் பகுப்பாய்வு அதிகாரியும், கஜேந்திரகுமாரும் குறித்த நபரிடம் உங்கள் அடையாள அட்டையை காண்பிக்குமாறு கோரியபோது, அவர் அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்றுள்ளார். அவரைத் தடுக்க கஜேந்திரகுமார் முயன்ற போது, அவரை உதறித்தள்ளிவிட்டு அந்த நபர் ஓடிச்செல்கிறார். அங்கு குறித்த நபருடன் வந்திருந்த இன்னொரு நபரை கஜேந்திரகுமார் தரப்பினர் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதற்கிடையில், குறித்த பொது மைதானத்தோடு ஒட்டியமைந்த பரீட்சை மையத்தில் கடமையிலிருந்த சிவில் உடை தரித்த பொலிஸாக தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட நபர் ஒருவருக்கும், கஜேந்திரகுமாருக்கும் கடும் வாக்குவாதமும் நிகழ்ந்துள்ளது. இவையெல்லாம் ஊடகப் பதிவுகள் மூலமும், சமூக ஊடகப் பதிவுகள் மூலமும் நமக்கு அறியக்கிடைத்தவை.

இதேவேளை, மருதங்கேணி சம்பவம் தொடர்பில் எம்பி கஜேந்திரகுமார் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் முறைப்பாடு செய்திருந்தார். ஆனால் அவர் பொலிஸில் முறைப்பாடு செய்தாரா என தெரியவில்லை.

ஒரு எம்.பியாக கஜேந்திரகுமார், குறித்த சந்தர்ப்பத்தில் நடந்துகொண்ட விதம் பற்றியும், வாக்குவாதத்தில் ஈடுபட்ட விதம் பற்றியும் பல தரப்பட்ட கருத்துக்கள் சமூக ஊடகங்களில் முன்வைக்கப்படுகின்றன.

பாராளுமன்றத்திற்குள்ளேயே அப்பட்டமான ரெளடியிசத்தை முன்னெடுத்து, பாராளுமன்றச் சொத்துக்களை சேதப்படுத்திய, பாராளுமன்றத்தை இயங்கவிடாது செய்த, எம்பிக்களைக் கொண்ட கட்சியினர், கஜேந்திரகுமாரின் நடவடிக்கையை கேள்வி கேட்பதெல்லாம் பெரும் முரண்நகை. ஆனால், கஜேந்திரகுமார் இன்னும் கொஞ்சம் பக்குவமாக நிலைமையைக் கையாண்டிருக்கலாம் என்பதிலும் உண்மை இல்லாமல் இல்லை.

நாம் ஒரு பொது இடத்தில், இருந்து பேசும் போது, அருகில் இரண்டு பேர் வந்து நின்றால், அவர் யார், ஏன் நிற்கிறார் என்று வினவ வேண்டிய அவசியம் கிடையாது. அது பொது மைதானம். யாரும் வரலாம், நிற்கலாம். நேரடியாக அவர்கள் உங்களுக்கு இடையூறு விளைவிக்காத வரை, அவர்கள் யாரென்ற விசாரணை தேவையற்றது. தனியார் இடத்திற்கும், பொது இடத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது.

மேலும், சாதாரணமாக அரசியல் நிகழ்வுகளை அரச புலனாய்வுத்துறைகள் அவதானித்து வருவது, அரசியல் யதார்த்தம். ஆகவே, இந்தப் பிரச்சினையின் ஆரம்பமே ஒரு தேவையற்ற விசாரிப்பில் தொடங்கியிருக்கிறது என்றே தோன்றுகிறது. அது எவ்வாறு அமையினும், கஜேந்திரகுமாரின் கைது என்பது இங்கு முற்றிலும் வேறோர் பரிமாணத்தையே காட்டி நிற்கிறது.

இந்தநிலையில் கஜேந்திரகுமாருக்கு எதிராக பயணத்தடையுத்தரவு மருதங்கேணி பொலிஸாரினால் பெறப்பட்டிருந்தது.

கஜேந்திரகுமார் தனது ட்விட்டரில் வெளியிட்ட ஆவணங்களின் படி, கஜேந்திரகுமார் எம்பியை, ஜூன் மாதம் 8ஆம் திகதி, காலை 10 மணிக்கு மருதங்கேணி பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்கும், வாக்கு மூலம் வழங்கவும் வருமாறு ஜூன் 6ம் திகதி கொள்ளுப்பிட்டி பொலிஸினூடாக கஜேந்திரகுமாருக்கு தகவல் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

முதலில் இந்தத் தகவல் சிங்கள மொழியில் மட்டும் வந்தபோது, அதனை ஏற்கவில்லை. தமிழும் இலங்கையின் உத்தியோகபூர்வ மொழிகளில் ஒன்று. ஆகவே ஒரு தமிழர் அரச ஆவணமொன்றை தமிழில் தருமாறு கேட்பது அவரது மொழியுரிமை. அதனை ஏற்றுக்கொண்டு பொலிஸாரும், குறித்த செய்தியை மும்மொழிகளிலும், 6ம் திகதியே கஜேந்திரகுமாருக்கு வழங்கியிருக்கிறார்கள். இதன்படி, அவரை மருதங்கேணி பொலிஸிற்கு 8ம் திகதி காலை 10 மணிக்கு வருமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இதற்கிடையில், மருதங்கேணி சம்பவம் தொடார்பிலும், பொலிஸாரின் சட்டவிரோத நடவடிக்கை தொடர்பிலும் பாராளுமன்ற வரப்பிரசாத மீறல் விடயமொன்றை 7ம் திகதி எழுப்புவதற்கான அறிவித்தலை, சபாநாயகருக்கு 6ம் திகதியே எழுத்துமூலம் கஜேந்திரகுமார் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், திடீரென்று, 7ம் திகதி காலை, கஜேந்திரகுமார் பாராளுமன்றம் செல்லத் தயாரான போது பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, மருதங்கேணி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்.

8ம் திகதி காலை பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு தகவல் அனுப்பிவிட்டு குறித்த நபருக்கு எதிரான பயணத்தடை உத்தரவையும் பெற்றுவிட்டிருந்த நிலையில், அவரை 7ம் திகதி காலையில் கைது செய்ய வேண்டியது ஏன்? இது முறையற்ற நோக்கங்களுக்காக முன்னெடுக்கப்பட்ட சட்டவிரோதக் கைது என இந்த விடயத்திலேயே புலப்படுகிறது.

கஜேந்திரகுமாருக்கு எதிராக நீதிமன்றில் பயணத்தடை பெற்ற பொலிஸார், அவரைக் கைது செய்வது அத்தியாவசியமானது என்றால், நீதிமன்றிடம் அதற்கான ஆணையையும் கோரியிருக்கலாம். ஆனால் நீதிமன்றக் கட்டளை எதுவுமில்லாமல், பாராளுமன்றத்தில் வரப்பிரசாத மீறல் பிரச்சினையை எழுப்பவிருந்த ஒரு எம்பியைக் கைது செய்தமை, சட்ட விரோதமானது என்பதை விட, மிகப் பெரிய ஜனநாயக விரோதச் செயல்.

ஒரு நியாயமான சபாநாயகர், இதனை உடனே தடுத்து நிறுத்தியிருப்பார். குற்றவியல் விடயங்கள் தொடர்பில் எம்பிக்களைக் கைதுசெய்வது பாராளுமன்ற வரப்பிரசாதங்களுக்குள் அடங்காது. ஆனால் அந்தக் கைது சட்டபூர்வமானதாக இருக்க வேண்டும். ஒரு பாராளுமன்ற உறுப்பினரை சட்டவிரோதமாகக் கைது செய்வது, அதுவும் அவர் பாராளுமன்றம் செல்லவதைத் தடுக்கும் வகையில் கைது செய்வது பாராளுமன்ற வரப்பிரசாதத்தை மீறும் செயலாகவே பார்க்கப்பட வேண்டும் என்பதோடு, பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் செயலாகவே பார்க்கப்பட வேண்டும். ஆனால் அதனை அப்படி பார்க்கும் நிலையில் இந்த சபாநாயகர் இல்லை என்பதையே அவரது நடவடிக்கைகளும், பேச்சும் கோடிட்டு காட்டி நிற்கின்றன.

இதனால்தான் கஜேந்திரகுமாரின் கைது என்பதை, அரச அடக்குமுறையின் இன்னொரு வடிவமாகப் பார்ப்பவர்களைப் பிழை சொல்ல முடியாதுள்ளது. ஒரு பாராளுமன்ற உறுப்பினரையே பொலிஸார் இப்படி நடத்துகிறார்கள் என்றால், சாதாரண மக்களின் நிலையென்ன. அதிலும் குறிப்பாக அடக்குமுறைக்குள்ளாகும் சிறுபான்மை மக்களின் நிலையென்ன என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியாதுள்ளது.

டிரான் அலஸ் போன்ற மனித உரிமைகள் பற்றி கொஞ்சமும் அக்கறைகாட்டாத ஒரு நபரை பொலிஸிற்குப் பொறுப்பாக அமைச்சராக வைத்துக்கொண்டு, ரணில் விக்ரமசிங்ஹவினால் ஜனநாயக ஆட்சியை முன்னெடுக்க முடியாது என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும். இல்லை, அடுத்த தேர்தல் வெற்றிக்காக அவரும் தன்னை இனத்தேசிய அரசியலில் ஆழத்துவாரேயானால், அவர் தவறான பாதையைத் தேர்ந்தெடுத்திருக்கிறார் என்பதை காலம் அவருக்கு தெளிவாக உணர்த்தும்.

## கடிதங்கள்

### கவனிக்கவும்

டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. ஆகையால், தங்களுடைய சுற்றாடலை சுத்தமாக, மழைநீர் தேங்கி இருக்காத வகையில் சுத்தப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

தங்களுடைய வீட்டுத்தோட்டங்களையும் நீர்நிரம்பி, தேங்கி நிற்கக்கூடிய இடங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். இல்லையேல் தங்களுக்கு மட்டுமன்றி அக்கம் பக்கத்தில் இருப்பவரையும் டெங்கு நுளம்புகள் கடிக்கக்கூடும். இது பேராபத்துக்கு வழிசமைக்கும் என்றும், டெங்கு நுளம்புகள் பெருக்கும் மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

மழையுடன் கூடிய காலநிலை நீடித்துக்கொண்டுச் செல்வதால், நீர் தேங்கிநிற்பது அதிகரித்துள்ளது. அத்துடன், மதகுகள் குப்பைகளால் அடைத்துள்ளன. அவற்றை சுத்தம் செய்யவேண்டும். அதுமட்டுமன்றி, டெங்கு நுளம்பு பெருகும் வகையில் சுற்றுச்சூழலை வைத்திருப்போருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.



# SLT-MOBITEL'இன் mCash க்கு கௌரவிப்பு

SLT-MOBITEL இன் mCash சேவைக்கு இலங்கையின் மிகச்சிறந்த புத்தாக்க டிஜிட்டல் கொடுப்பனவுகளுக்கான கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது. ஆசிய Fintech கல்வியகத்தினால் (AFTA) கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் இந்த உயர் கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது. வியாபாரங்கள் மற்றும் விற்பனைகள் துறைக்கு நவீன டிஜிட்டல் கொடுப்பனவுகள் தீர்வுகளினூடாக பலன்களை அனுபவிக்கக்கூடிய வகையில், இலங்கையின் டிஜிட்டல் கொடுப்பனவுகள் மற்றும் திரட்டல்கள் பிரிவில் mCash இன் சிறந்த பங்களிப்புகளை கௌரவிக்கும் வகையில் இந்த விருது அமைந்திருந்தது.

இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் இலங்கை மத்திய வங்கியின் உதவி ஆளுநர் ஆனந்த ஜயலத், மத்திய வங்கியின் முன்னாள் உதவி ஆளுநர் கலாநிதி. டி. குமாரதுங்க PhD, இலங்கை Fintech சம்மேளனத்தின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி. திஸ்ஸ ஜயவீர PhD, FASL தலைவர் ராஜ்குமார் கனகசிங்கம் மற்றும் ஜோசப் ஜோஷி (இந்தியாவின் சர்வதேச நிதிச் சேவைகள் நிலைய அதிகார சபை (IFSCA) பிரதம தகவல் அதிகாரி) ஆகியோருடன், இலங்கையின் முன்னணி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள், தொலைத்தொடர்பாடல் நிறுவனங்கள் மற்றும் fintech நிறுவனங்களின் பிரதிநிதிகளும்




கலந்து கொண்டனர்.

இலங்கையின் முன்னணி மொபைல் நிதிச் சேவைகளை வழங்குநர் எனும் வகையில், mCash தொடர்ந்தும் திரட்டல் முகாமைத்துவ பிரிவில் குறிப்பிடத்தக்களவு வெற்றியை பதிவு செய்த வண்ணமுள்ளது. வருமானத்தைப் பொறுத்தமட்டில், வளர்ந்து வரும் வாடிக்கையாளர் இருப்பு மற்றும் mCash செயற்படுத்தப்பட்ட வலையமைப்பு போன்றவற்றுடன் வியாபாரங்கள் ஒப்பற்ற வளர்ச்சியை பதிவு செய்த வண்ணமுள்ளன. வாடிக்கையாளர்கள் மற்றும் வியாபார பங்காளர்களுக்கு தொழிற்துறையில் முன்னணி சேவைகளை வழங்குவதில் நிறுவனத்தின் அர்ப்பணிப்பை உறுதி செய்வதில் உறுதியான வெற்றியை பதிவு செய்துள்ளதுடன், டிஜிட்டல் கொடுப்பனவுகள் மற்றும் திரட்டல்களை நாடு முழுவதிலும் மேற்கொள்வதில் mCash இன் முயற்சிகளினூடாக ஊக்குவிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றமை இந்த கௌரவிப்பினூடாக மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.


ஆசிய டிஜிட்டல் நிதியியல் விருதுகளை, சில நிதியியல், FinTech மற்றும் blockchain நிறுவனங்களுடன் இணைந்து ஆசிய FinTech கல்வியகம் வழங்குகின்றது. அமெரிக்காவின் கொலராடோவைச் சேர்ந்த சர்வதேச நியமச் சபையின் (IBS) அங்கம் பெறும் அமைப்பாக AFTA திகழ்கின்றது. உலகளாவிய ரீதியில் 40 க்கும் அதிகமான நிறுவனங்களில் இயங்கும் சான்றளிக்கும் அமைப்பாக திகழ்கின்றது. Global Academy of Finance and Management (GAFM)இனால் வழங்கப்படும் சான்றிதழ்கள் மற்றும் வர்த்தகச்சின்னங்களின் உரிமையாண்மையை IBS கொண்டுள்ளது.

# தங்க நகைகளின் தொகுப்பை வெளியிடும் Pure Gold by Tiesh

தியேஷ் (Tiesh), இன் துணை நிறுவனமான Pure Gold by Tiesh இன் கீழ் நவீன வடிவமைப்புகளைக் கொண்ட (filigree) தொகுப்பை சமீபத்தில் அறிமுகப்படுத்தியது. இது ஐரோப்பா, இத்தாலி, துருக்கி, துபாய் ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர நகைகளின் தொகுப்பைக் கொண்டுள்ளது. இத்தொகுப்பில் இத்தாலிய 18 கெரட் நகைகள் மற்றும் முத்துகளால் அலங்கரிக்கப்பட்ட 22 கெரட் தங்கத் துண்டுகளும் அடங்கியுள்ளன.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நவீன வடிவமைப்புகளைக் கொண்ட filigree நகைத் தொகுப்பானது நேர்த்தியான, பாரம்பரியமான, உயிர்ப்புமிக்க தன்மையை வெளிப்படுத்தும் ஈர்க்கக்கூடிய காதணிகள், நெக்லஸ்கள், வளையல்கள், மோதிரங்கள் ஆகியவற்றின் கவர்ச்சிகரமான தயாரிப்புகளை கொண்டுள்ளன. மூவர்ணம், இளஞ்சிவப்பு தங்கம், வெள்ளைத் தங்கம், மஞ்சள் தங்கம் ஆகிய வண்ணங்களில், Pure Gold by Tiesh தொகுப்புகள் கிடைக்கின்றன. குறிப்பாக திருமண பருவகாலங்களுக்கு ஏற்றவகையில், அதன் ஒவ்வொரு அம்சமும் நேர்த்தியாக, மிகக் கவனமாக இந்தத் தொகுப்பை Tiesh தொகுத்துள்ளது. இலங்கையின் நடிகையான யெஹாலி டாஷியா காளிதாச, Tiesh வர்த்தக நாம தூதுவராக திகழ்கின்றார்.

இந்த வர்த்தக நாமத்தின் விசேடத்துவம் பற்றி கருத்துத் தெரிவித்த நிறுவனத்தின் பணிப்பாளர் தியாஷா டி பொன்சேகா, ஏனைய மணப்பெண் நகைகளிலிருந்து எமது நகைகள் தனித்துவமாக நிற்கின்றன. வடிவமைப்பு முதல் தரம் மற்றும் கைவினைத்திறன் வரை அனைத்து அம்சங்களிலும் நாம் ஆழமாக கவனம் செலுத்துகிறோம். எமது வாடிக்கையாளர்கள் எமது நகை தொகுப்புகளில் அதிக நம்பிக்கையையும்



திருப்தியையும் வெளிப்படுத்தியுள்ளதோடு, எமது தொகுப்புகள் பல முன்னணி நகைக்கடைகளின் தொகுப்புகளை விட உயர்ந்தவையாக இருப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். என்றார்.

புதிய filigree வடிவமைப்பு தொகுப்பானது, நேர்த்தியான வகைகளாக உள்ள நவீன வடிவமைப்புகளின் நுட்பம் மற்றும் காலத்தால் அழியாத கவர்ச்சியை வெளிப்படுத்துகிறது. மாற்றமுறும் நகைகளைச் சேர்ப்பதன் மூலம் Tiesh இன் தொகுப்பு ஒரு புதுமையான கவர்ச்சியை பெறுவதோடு, இது ஏனைய நகைகளிலிருந்து அதனை வேறுபடுத்துகிறது. Tiesh இன் ஒவ்வொரு நகையும் பாரம்பரியம் மற்றும் நவீன போக்கின் கூறுகளின் கலவையாகும். இது வாடிக்கையாளர்கள் தங்கள் தனிப்பட்ட விருப்பங்களுக்கு ஏற்ப தனிப்பயனாக்க வாய்ப்பளிக்கிறது. இந்த பிரத்தியேக தன்மையானது, இவ்வர்த்தகநாமத்தை அதன் போட்டியாளர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதோடு, அது வடிவமைப்பு விபரங்களில் கவனம் செலுத்துவதானது, ஒவ்வொரு வடிவமைப்பிற்கும் நவீன ஆடம்பரத்தை சேர்க்கிறது.

"உங்களுக்குப் பிடித்த கைக்கடிகாரத்துடன் அழகாக இணைத்து அணியவும், ஒரு ஜோடி பாரம்பரிய வளையல்களாக அணியவும் அல்லது மிகவும் நுட்பமான தோற்றத்தை காண்பிக்கும் வகையில் தனியாக அணியவும் என, எந்தவொரு தோற்றத்திற்கும் ஏற்ற வகையில் அணிவதற்கான வடிவமைப்புகளின்

# கென்ரிச் ஃபைனான்ஸின் "சாலை பாதுகாப்பு அடையாள பலகை"

கென்ரிச் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு வேலைத்திட்டம், சுற்றுச்சூழல், கல்வி மற்றும் சமூகம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது.

வெள்ளவத்தை பிரதேசத்தில் பொறுப்பற்ற வாகன நிறுத்தம் நீண்டகாலமாக பெரும் பிரச்சினையாக காணப்படுவதனால், கென்ரிச் ஃபைனான்ஸ் வெள்ளவத்தை பொலிஸாருக்கு உதவுவதற்கு சரியான நேரத்தில் நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி முக்கியமான இடங்களில் வீதி பாதுகாப்பு அடையாள பலகைகளை காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

பயணிகள் மற்றும் சாரதிகள் இருபாலரும் வீதியை பாதுகாப்பாக வைத்திருக்க ஒத்துழைக்க வேண்டும். இந்த முயற்சியானது வெள்ளவத்தை பகுதியில் வீதி பாதுகாப்பு மற்றும் பொறுப்பான வாகன தரிப்பிட நடைமுறைகளை ஊக்குவிக்கும்.

கென்ரிச் ஃபினான்ஸ் நிறுவனம் அண்மையில், வெள்ளவத்தை பொலிஸாருக்கு "சாலை பாதுகாப்பு அடையாள பலகைகளை" வழங்கியது. இந்த பலகைகள் வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி W. V. T. மதுஷங்கவிடம் உதவிப் பொது முகாமையாளர்- கூட்டாண்மை தொடர்பாடல்கள். முகாமையாளர் சமந்த W. குணவர்தனவினால் கையளிக்கப்பட்டது. மங்கள சுசந்த -உதவி பொது முகாமையாளர் – கூட்டாண்மை தொடர்பாடல்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

இது பிரதேசத்தில் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட ஒரு தேவையாக இருந்ததால், கென்ரிச் ஃபினான்ஸின் இந்த நடவடிக்கை வெள்ளவத்தை பொலிஸாரால் வெகுவாக பாராட்டப்பட்டது. கென்ரிச் ஃபினான்ஸின் சமூக ஈடுபாடு மற்றும் சாலைப் பாதுகாப்பிற்கான அர்ப்பணிப்பு ஒரு பொறுப்பான நிதி நிறுவனமாக அதன் மதிப்புகளின் பிரதிபலிப்பாகும். நிறுவனம் அதன் சமூகப் பொறுப்புத் திட்டத்தின் மூலம் சமூகத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது .







# நினைவுநாள் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட சங்கிலிய மன்னனின் 404 ஆவது நினைவு தினம் வவுனியா கற்குளத்தில் மகாவிஷ்ணு ஆலய நீர் தடாகத்தில் ஞாயிற்றுக்கிழமை (11) அனுஸ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வை, சிவசேனை மற்றும் கற்குளம் மகா விஷ்ணு ஆலயம் என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

க. அகரன்

# மாபெரும் இரத்ததான முகாம்




வைத்தியசாலையில் ஏற்படும் குருதி வங்கியின் குருதி பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் முகமாக "உதிரம் கொடுத்து உயிர்காப்போம்" எனும் தொனிப்பொருளில் இரத்ததான முகாம் ஒன்று சாய்ந்தமருது USF ஸ்ரீலங்கா அமைப்பின் ஏற்பாட்டில் சனிக்கிழமை (10) காலை 8.30 தொடக்கம் மாலை வரை சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தில் அமைப்பின் தலைவர் முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஜி. அன்வர் தலைமையில் இடம்பெற்றது.

நூருல் ஹுதா உமர்



# நூல் வெளியீட்டு விழா



மருத்துவர் சம்பூர் அ . சதீஸ்குமார் தொகுத்த திருகோணமலைப் பெரியார்கள் நூல் வெளியீட்டு விழா சனிக்கிழமை (10) மாலை 4.40 மணிக்கு திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலய திருமண மண்டபத்தில் குச்சவெளி பிரதேச செயலாளர் கு .குணநாதன் தலைமையில் இடம் பெற்றது.

அ . அச்சுதன்





# நீர்ப்பம்பிகள் வழங்கி வைப்பு

கிழக்கு மாகாணத்தில் விவசாய நடவடிக்கைகளை நவீனமயமாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் வாழை மற்றும் மாதுளை பழ உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு நீர்ப்பம்பிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு சனிக்கிழமை (10) மட்டக்களப்பு, கல்லடி சன்சைன் கிறான்ட் மண்டபத்தில் நடைபெற்றது.

பேரின்பராஜா சபேஷ்




# மீராவில் மாணவர் ஒன்று கூடல்



காத்தான்குடி மீரா பாலிகா தேசிய பாடசாலையின் பழைய மாணவர்களை பாடசாலைக்கு அழைக்கும் பழைய மாணவர் ஒன்று கூடல் நிகழ்வு எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி காத்தான்குடி மீரா பாலிகா தேசிய பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக உள்ளூர் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு பாடசாலை அதிபர் அஷ்ஷெய்க் யு.எல்.எம்.மன்சூர் தலைமையில் சனிக்கிழமை (10) நடைபெற்றது.

எம் எஸ் எம் நூர்தீன்

# விருதுகள் வழங்கும் நிகழ்வு

அக்கரைப்பற்று தமிழ் லெட்டர் வலையமைப்பு எட்டாவது தடவையாக நடாத்திய ஆளுமைக்கான விருதுகள் வழங்கும் நிகழ்வு, இம்முறை இக்கட்டான காலத்தில் சிறப்பாக செயலாற்றியவர்களை கௌரவிக்கும் விதமாக அட்டாளைச்சேனை லொயிட்ஸ் மண்டபத்தில் தமிழ் லெட்டர் பிரதானி சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ.எல். ரமீஸின் நெறிப்படுத்தலில் அதிபர் ஏ.ஜீ.எம். அன்வர் தலைமையில் சனிக்கிழமை (10) நடைபெற்றது.

நூருல் ஹுதா உமர்



ஆலப்புழை

# மறுமணத்துக்காக மகள் கொத்திக் கொலை

போதைக்கு அடிமையாகியிருந்த ஒரு பெண் குழந்தையின் தந்தை, மறுமணம் செய்துக்கொள்வதற்கு யாரும் பெண் கொடுக்கமையால், தன்னுடைய மகளை கோடரியால் கொத்தி படுகொலைச் செய்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கேரள மாநிலம், ஆலப்புழை மாவட்டம், மாவேலிக்கரையை அடுத்த புன்ன மூடு பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

3 ஆண்டுகளுக்கு முன்னர் தன் மனைவி தன்னுயிரை மாய்த்துக்கொண்டதன் பின்னர் வெளிநாட்டில் இருந்து சொந்த ஊருக்குத் திரும்பி தன்னுடைய மகளுடன் வசித்து வந்தார்.

இந்நிலையில், தன்னுடைய மகளை கோடரியால் வெட்டிக்காயப்படுத்திவிட்டு தப்பிக்க முயன்றார். எனினும், மக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைந்தனர்.

மனைவி இறந்த நிலையில், மறு திருமணம் செய்ய அவர், பெண் பார்த்து வந்ததாக கூறப்படுகிறது. ஆனால் பெண் குழந்தை இருந்ததால், பலரும் பெண் கொடுக்க முன் வரவில்லை. இதனால் மகளை அவர் கொன்று இருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் கடந்த 4 ஆண்டுகளாக போதைக்கு அடிமையாகி இருந்தார் என்றும் கூறப்படுகிறது

மகாராஷ்டிரா

# அழுகையை நிறுத்த முயன்ற 'டேப்' தாதி

மாநிலம் மும்பையில் சாவித்திரி பாய் பூலே மகப்பேறு மருத்துவமனை இயங்கி வருகிறது. இந்த மருத்துவமனையில் 25 வயதான பெண்ணுக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. பிறந்த பச்சிளம் குழந்தைக்கு மஞ்சள் காமாலை நோய் இருந்துள்ள நிலையில், அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளது.

குழந்தைக்கு மருத்துவர் கண்காணிப்புடன் சிகிச்சை அளித்து வந்துள்ளனர். 2 மணிநேரத்திற்கு ஒரு முறை குழந்தைக்கு சென்று பால் கொடுங்கள் என தாயிடம் மருத்துவர் கூறியுள்ளார்.

அதன்படி இரவு 11 மணியளவில் குழந்தைக்கு தாய்பால் கொடுக்க தாய் சென்றுள்ளார். அங்கு பணிபுரிந்த நர்ஸ், அடுத்த நாள் காலை 8 மணிக்கு வாருங்கள் போதும் எனக் கூறியுள்ளார்.

தாதியின் பேச்சு சந்தேகத்தை கிளப்பவே உள்ளே சென்று பார்த்துள்ளார். அப்போது தான் தனது குழந்தையின் வாயில் டேப் ஒட்டப்பட்டிருந்தது தெரியவந்துள்ளது. குழந்தை அழுது கொண்டே இருப்பது தொந்தரவாக இருந்ததால் சத்தத்தை நிறுத்த இந்த செயலை அந்த தாதி செய்துள்ளார்.

அமெரிக்கா

பாத்ரூமில் ரகசிய ஆவணங்கள்

# டிரம்ப்புக்கு 100 ஆண்டுகள் சிறை?



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் வீட்டின் குளியலறையில் அணு ஆயுதங்கள் தொடர்பான ரகசிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளமை யாவரும் அறிந்தது.


அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், ஜனாதிபதி பதவியில் இருந்து விலகிய பிறகும் இரகசிய ஆவணங்களை கையாண்டதாக குற்றஞ் சாட்டப்பட்டார்.

இதுதொடர்பாக அவர் மீது மயாமி நீதிமன்றம் 7 குற்றச்சாட்டுகளையும் பதிவு செய்தது. மேலும், டிரம்ப் வீட்டில் ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டது குறித்து 6 படங்களும் வெளியாகின. அதில், அமெரிக்காவின் அணுசக்தி திட்டங்கள், அமெரிக்கா மற்றும் வெளிநாடுகளின் பாதுகாப்பு மற்றும் ஆயுதத் திறன் பற்றிய தகவல்கள், குறித்த விவரங்கள் அடங்கிய ஆவணங்கள் டிரம்ப் வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கில் செவ்வாய் கிழமை (13) டொனால்ட் டிரம்ப் நீதிமன்றத்தில் ஆஜராகவுள்ளார். அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால், அவருக்கு 100 ஆண்டுகள் வரை தண்டனை கிடைக்க வாய்ப்புள்ளது.

இதற்கிடையே, தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனின் அலுவலகம், மற்றும் அவரது டெலாவர் இல்லத்திலும் ரகசிய கோப்புகள் மற்றும் ஆவணங்கள் உள்ளன என்று டிரம்ப் குற்றம்சாட்டியுள்ளார்.

ரோம்



# கப்பலை கடத்தும் முயற்சி முறியடிப்பு

துருக்கியைச் சேர்ந்த சரக்கு கப்பல் ஒன்று பிரான்ஸ் நாட்டிற்க்கு சென்று கொண்டிருந்தது. இந்த கப்பல் நடுக்கடலில் பயணம் செய்து தொண்டிருந்த போது, கப்பலில் அடையாளம் தெரியாத சிலர் ஏறியிருந்ததைக் கண்டு கப்பல் ஊழியர்கள் அதிர்ச்சி அடைந்தனர். அவர்களிடம் கத்தி உள்ளிட்ட ஆயுதங்கள் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், கப்பல் மாலுமி உள்ளிட்ட ஊழியர்கள் கப்பலின் இஞ்சின் அறைக்குள் தங்களை பூட்டிக்கொண்டு இருந்துள்ளனர். மேலும் இது குறித்து இத்தாலி மற்றும் பிரான்ஸ் நாடுகளைச் சேர்ந்த கடல்சார் பாதுகாப்பு படையினருக்கு அபாய சமிக்ஞை அனுப்பியுள்ளனர்.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த இத்தாலி சிறப்புப்படையினர், கப்பலில் இருந்த ஆயுதக் கும்பலின் தாக்குதலை முறியடித்து, கப்பலை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். தற்போது கப்பல் நப்லேஸ் துறைமுகத்திற்கு வெளியே நங்கூரம் பாய்ச்சி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

நப்லேஸ் பகுதியின் தெற்கு பகுதியில் இருக்கும் சட்டவிரோதமாக புலம்பெயர்ந்தவர்களில் சிலர் ஆயுதமேந்தி இந்த செயலில் ஈடுபட்டதாக செய்தி நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வொஷிங்டன்,



# ரஷ்யாவில் டிரோன் தொழிற்சாலை

உக்ரேன்- ரஷ்யா இடையிலான போர் ஓராண்டுக்கும் மேலாக நீடித்து வருகிறது. இந்த போரில் அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் உக்ரேனுக்கு இராணுவம் மற்றும் பொருளாதார உதவிகளை வழங்கி வருகின்றன. உக்ரைனின் பகுதிகளை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ரஷ்யா முயற்சித்து வருகிறது.

தற்போது இரு தரப்பிலும் டிரோன் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. அண்மையில் இரு நாட்டு எல்லைப் பகுதியில் உள்ள ரஷ்யப் பகுதியில் டிரோன் தாக்குதல் நடத்தப்பட்டது. இனிவரும் காலங்களில் டிரோன்கள், தாக்குதலுக்கு மிகப்பெரிய அளவில் பயன்படுத்தப்படும் எனத் தெரிகிறது.

# இருட்டில் நிர்வாணமாக இறைச்சியை சாப்பிட்ட பெண்கள்



கனேடிய பெண்ணொருவர் (வயது 36) தனது தோட்டத்தில் இறந்து கிடந்த மானை கண்டெடுத்தார். மானை புதைக்காமல், தோட்டத்தின் ஒரு ஓரத்தில் வைத்துவிட்டு அதனருகே ஒரு கேமெராவையும் வைத்துள்ளார். ஏதாவது காட்டு மிருகம் மானை சாப்பிட வரும்போது அதை வீடியோ எடுக்கலாம் என்ற ஐடியாவில் இதனை அவர் செய்துள்ளார்.




உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி:

# இந்தியாவை வீழ்த்தி சம்பியனான அவுஸ்திரேலியா

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா சம்பியனானது.

ஓவலில் கடந்த புதன்கிழமை ஆரம்பித்து நேற்று முடிவுக்கு வந்த இப்போட்டியில் இந்தியாவை 209 ஓட்டங்களால் வென்றே முதற் தடவையாக அவுஸ்திரேலியா சம்பியனானது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட அவுஸ்திரேலியா, ட்ரெவிஸ் ஹெட்டின் 163, ஸ்டீவன் ஸ்மித்தின் 121, அலெக்ஸ் காரியின் 48, டேவிட் வோர்னரின் 43 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 469 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், மொஹமட் சிராஜ் 4, மொஹமட் ஷமி மற்றும் ஷர்துல் தாக்கூர் ஆகியோர் தலா 2, இரவீந்திர ஜடேஜா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்தியா சகல விக்கெட்டுகளையும் இழந்து 296 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், அஜின்கியா ரஹானே 89, ஷர்துல் தாக்கூர் 51, இரவீந்திர ஜடேஜா 48 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், அணித்தலைவர் பற் கமின்ஸ் 3, ஸ்கொட் போலண்ட், கமரொன் கிறீன், மிற்செல் ஸ்டார்க் ஆகியோர் தலா 2, நேதன் லையன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்நிலையில் தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 8 விக்கெட்டுகளை இழந்து 270 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தமது இனிங்ஸை இடைநிறுத்தியது. துடுப்பாட்டத்தில், அலெக்ஸ் காரி ஆட்டமிழக்காமல் 66, மர்னுஸ் லபுஷைன் 41, மிற்செல் ஸ்டார்க் 41, ஸ்டீவன் ஸ்மித் 34 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், இரவீந்திர ஜடேஜா 3, உமேஷ் யாதவ், மொஹமட் ஷமி ஆகியோர் தலா 2, மொஹமட் சிராஜ் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

அந்தவகையில் 444 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்தியா சகல விக்கெட்டுகளையும் இழந்து 234 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில், விராட் கோலி 49, அஜின்கியா ரஹானே 46, அணித்தலைவர் றோஹித் ஷர்மா 43 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், நேதன் லையன் 4, ஸ்கொட் போலண்ட் 3, மிற்செல் ஸ்டார்க் 2, பற் கமின்ஸ் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக ட்ரெவிஸ் ஹெட் தெரிவாகினார்.




நுவரெலியா காற்பந்தாட்டச் சங்க தங்கக் கிண்ணத் தொடர்:

# வெற்றிவாகை சூடிய யங் பேர்ட்ஸ்

நுவரெலியா கால்பந்தாட்டச் சங்க தங்கக் கிண்ணத் தொடரில் யங் பேர்ட்ஸ் சம்பியனானது.

மாநகர சபை பொது மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் யங் யுனைட்டெட்டை 1-0 என்ற கோல் கணக்கில் வென்றே பேர்ட்ஸ் சம்பியனானது.

இத்தொடரின் சிறந்த வீரரானப் பேர்ட்ஸின் வி, விவேக்கும், சிறந்த கோல் காப்பாளராக யுனைட்டெட்டின் ரஹீம் தெரிவாகினர்.



# பாகிஸ்தான், இலங்கையில் ஆசியக் கிண்ணம்?

இந்தியா விளையாடும் போட்டிகள் இலங்கையில் நடைபெறும் வகையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையால் பாகிஸ்தானிலும், மூன்றாவது நாட்டிலும் விளையாடப்படும் ஆசியக் கிண்ண முன்மொழிவானது ஆசிய கிரிக்கெட் சபையால் அங்கிகரிக்கப்படுமெனத் தெரிகிறது.

அந்தவகையில் இத்தொடரின் 13 போட்டிகளில் நான்கு அல்லது ஐந்து போட்டிகள் பாகிஸ்தானில் நடைபெறவுள்ளது.

# சம்பியன்ஸ் லீக்: சம்பியனான மன்செஸ்டர் சிற்றி

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில் இங்கிலாந்து பீறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றி சம்பியனானது.

துருக்கியில் நேற்று அதிகாலை நடைபெற்ற இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலனுடனான இறுதிப் போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் வென்றமையைத் தொடர்ந்தே முதற்தடவையாக சிற்றி சம்பினானது.

சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை றொட்றி பெற்றிருந்தார்.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 12 ஜூன் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.